
அதிரடி வீரர்
ஹெர்குலஸ்!
ரூ. 2·50


ஆகஸ்ட் மாதக் கடைசியில் ஒரு அதிகாலை பொழுது. பிரம்மாண்டமான அந்த கடல் சிறைச்சாலையை நோக்கி சென்று கொண்டிருந்தது ஒரு விசைப்படகு ..
அதிரடி வீரர் ஹெர்குலஸ்!




குட்மார்னிங் வார்டன்! என் பெயர் ஸ்காட். இதோ எனது விசேஷ பர்மிட்!
எனக்கு எல்லாம் தெரியும், மிஸ்டர் ஸ்காட்! உங்களைத் தான் எதிர்பார்த்திருந்தேன்! உங்கள் வரவும், திட்டமும் இரு மாபெரும் தவறுகள்!


மேலிடத்து உத்தரவுகளை விவாதிக்க இங்கு நான் வரவில்லை. மூசாவை வைத்து ஆரம்பிக்கலாம்! சரிதானே!
எவனாகயிருந்தால் என்ன? அதுசரி! இதுப்பற்றி இவன்-களுக்குத் தெரியுமா?


மிஸ்டர் ரீகன்! இந்த ஸ்பெஷல் சாவிகளை தாருங்கள்! நாம் மூசாவை சந்திக்கப் போகிறோம்!
ஆ-ஆகட்டும் சார்!


இதுதான் விசேஷ விருந்தினர் தங்குமிடமோ?
ஹாம்-இந்தக் கம்பிகளுக்கெல் பலன் ஏதும் கிடையாது. சமுதா யத்தைக் கண்டு நான் அனுதா பப்படுகிறேன். உங்கள் புண்-ணியத்தில் எனக்கு ஓர் பெரும் பாரம் குறையப் போகிறது!


மூசா! நான் தான் டைரக்டர் வந்திருக்கிறேன்! தள்ளி நின்று கொள்ள 5 வினாடி அவகாசம் மட்டும் தந்து விட்டு உன் நோக்கப்படி ஏதாவது செய்!
?
டமார்!


எப்படி என் அடி? இன்னும் ஒரே மாதத்தில் இதை ஓசையின்றி வெடிக்கச் செய்து விடுவேன்! அப்புறம் ஐயாவை ஒரு பயலால் தொடமுடியாது!


இந்த பெரிய மனுஷர்களுக் கெல்லாம் என்ன வேண்டும்? என்ன விசேஷம்!


உன் திட்டத்துக்கு சபாஷ் மூசா! ஆனால் இன்றே இந்த பிரமுகர்கள் உன்னை அழைத்துச் செல்லப் போகிறார்கள். இன்றைக்கே உனக்கு விடுதலை!
அப்படியா? நமக்கு விடுதலையா? பரவாயில்லையே!
ஆமாம்-கையில் வைத் திருக்கும் கருவி எங்-கிருந்து கிடைத்தது அவனுக்கு?
இந்த கேள்விகளுக்கு யாராலும் பதில் சொல்ல முடியாது. அதனால்தான் இவனை தேர்வு செய்துள்ளோம்! கில்லாடியாக தெரிகிறான்!


மர்மமாய் இருக்கிறதே! என் சாதாரண திறமைகளை பார்த்து ஓர் பெரும் புள்ளிக்கு என் மீது ஓர் தனி அக்கறை பிறந்திருக்கிறது என்றால் இதில் ஏதோ விஷமம் உள்ளது! ஆனால் இதை விட்டு வெளியே போனால் சரி!


எதற்கும் நம் ஹெர்குலஸ் வாத்யாரையும் அழைத்துச் சென்றால் ஷோக்காக தான் இருக்கும்!
வாயை மூடடா ராஸ்கல்! உன் அபிப்ராயத்தை யார் கேட்டது?


பய்ப்படாதே மூசா,..
ஹெர்குலஸ்ஸையும்
சந்திக்கத்தான்
போகிறாய்!
இங்கு அவனை யாரும்
பெயர் சொல்லி அழைப்
பதில்லை! ''அதிரடி வாத்
யார்'' என்று தான்
கூப்பிடுவார்கள்!
பட்டப்பெயரே பயங்கர
மாக உள்ளதே! இந்த
கதவும் நம் முகத்தில்
அடிக்கப் போகிறதா?
இதோ உங்கள் ஆசையை
நிறைவேற்றி
வைக்கிறேன்!


ஹெர்குலஸ்! நான்தான் வார்டன்! மின் தாழ்பால் இயங்கவில்லை. உதவிசெய்! நீயாக இந்தக் கதவைத் திற!
?
டம!


வேறு ஏதாவது செய்ய வேண்டுமா வார்டன்?


நண்பர்களே! நீங்கள் தேடி வந்த
நபரை அறிமுகப்ப்டுத்துகிறேன்.
இவர் தான்: அதிரடி ஹெர்குலஸ்!
அடக்
கடவுளே!


டைரக்டர்! என்ன
சங்கதி? இவர்க-
ளெல்லாம் யார்?


கன்வான்களே! உங்கள் திட்டத்தைப் பற்றி மூசாவிடமும், ஹெர்குலஸிடமும் நான் கூறிவிடுகிறேன்!
அடிச்சக்கே! மூசாவும் இதில் கூட்டணியா!
எனக்கு இந்த ஆரம்பமே பிடிக்கவில்லை...
ம் எனக்கு எப்படி ஆரம்பிப்பது என்றே தெரியவில்லை! சுருக்கமாய் சொல்லப் போனால் அரசாங்கத்துக்கு உங்களின் விசேஷ "திறமைகள்" தேவைப் படுகின்றன.
விஷயத்தை சொல்லுங்கள்!


எனக்கு சரியாக தெரியவில்லை. அரசாங்கத்தால் நேரடியாக செயல்படமுடியாத ஓர் இக்கட்டு! அதன் சார்பாக நீங்கள் தனிப்பட்ட முறையில் செயலாற்ற வேண்டும். வெற்றி கிடைத்தால், உங்கள் குற்றங்கள் மூடி மறைக்கப்படும்..


இதற்கு நீங்கள் சம்மதித்துத்தான் ஆகவேண்டும் என்று கிடையாது! வேண்டாமென்றால், முடியாது என்று மறுத்து விடலாம்!
சும்மா அளக்காதீர்கள்! இதில் ஏதோ ம்ப்ப்ப்-
மூசாவும், நானும் ரெடி சார்!


ஹெர்குலஸும், மூசாவும் வெளி உலகத்துக்குக் கொண்டுவரப் பட்டனர்..
வேலை பிடிக்காவிட்டால் ஒத்துக் கொள்ள மாட்டோம்! புரிகிறதா?
வாயை மூடு மூசா!


ஆனால் இந்த வேலையில் பல பிரச்சினைகள் உள்ளன என்பது நிஜம்தான்!
சொல்லப் போனால் பயங்கர சமாச்சாரம் இது!


இது ஓர் தனியார் ஏர்போர்ட் போல் உள்ளதே ..
கரக்ட் ஹெர்குலஸ்! உங்களை வேறு ஓர் இடத்துக்கு அழைத் துச் செல்ல இப்பொழுது வரு- வார்கள் சில நண்பர்கள்!
வேறு இடத்துக்கா?


இதற்குமேல் எங்களுக்கு ஒன்றும் தெரியாது- மேலிடத்து உத்தரவு!
இவர்கள் தான் மூசாவும், ஹெர்குலஸுமா?
ஆம்! இந்த பேப்பரில் ஓர் கையெழுத்து போட்டுவிட்டு இவர்- களை அழைத்து செல்லலாம்!


பெல்ட்டை கட்டிக் கொள்ளுங்கள்! உடனே நாம் கிளம்புகிறோம்!
கிளம்புறதெல்லாம் சரி! எங்கேப்பா போகிறோம்?


ஏய்! பைலட்! நான் கேட்பது காதில் விழவில்லையா? எங்களை எங்கே கடத்தி செல்கிறாய்?
பசங்களா! கேள்வி கேட்பதைப் பற்றி பிரச்சனையில்லை! பதில் மட்டும் என்னிடமிருந்து எதிர்பார்க்காதீர்கள்!


சே! வெப்பம் ஆளை பொசுக்குது! நீங்கள் எ.சியைப் பற்றி கேள் விப் பட்டதில்லையோ?
அடுத்த முறை உங்களுக்கு ஸ்பெஷல் போயிங் 747 விடுகிறேம். இப்போ- தைக்கு இறங்குகின்ற வழியைப் பார்ப்போம்!
இங்கேயே? நடுப்பாலை வனத்திலா?
அடடா! இங்கே டிராஃபிக் நெருக் கடிகளை எப்படி சமாளிக்கிறீர்கள்! சே! இப்படியும் ஓர் பொட்டல்காடா?
ஆமாம்! இந்த உல்லாச புரியில் தான்!
ஆ—அது என்ன?


ஹெலிகாப்டர் வருகிறது!
சரியான நேரத்தில் தான் வந்துள்ளது!


ரெடியாக இருக்கிறார்களா? காத்திருக்க பிடிக்காது தலைவருக்கு!
அதுசரி! நாங்கள் மட்டும் இந்த பாலைவனத்தில் ஜன்மமாய் காத்திருக்கலாம்! சரி சரி! அழைத்துப் போ!


பொறுமையாக இருங்கள்! பிரயாணத்தின் இந்த கடைசி கட்டம் சுறுக்கமானது தான்.
இருக்கலாம்! மற்றவைகளை விட சௌகரியம் என்று சொல்ல முடியாது!
உங்களோடு பிரயாணம் செய்வது ஓர் அரிய அனு-பவும் தான்!


நாம் வந்து விட்டோம்! கண்ணை மூடியிருக்கும் துணியை எடுக்காதீர்கள். எடுக்க முயற்சித்தால் சுடுவதை தவிர வேறு வழியில்லை!
கவலை வேண்டாம்! எங்களை சுற்றி இருக்கும் ரம்மியத்தை காணாமல் இருப்பதற்கு இந்த கண்மூடிகள் ஓர் வரப்பிரசா-தம்! சொல்லப் போனால் உங்களுக்கு நன்றிகூற வேண்டும்!
ACE
SERVICE STATION


இதோ! மூசாவும், ஹெர்குலஸும்!
ஓ. கே அங்கே கூட்டி செல்லுங்கள்! கிட்டங்கிப் பக்கம்!


என்ன? இந்த அறையே ஆடுகிறது!
இது ஓர் லிப்ட்! பாதாளத்தில் இறங்குகிறது!


இருவரும் வந்து விட்டார்கள், சார்!
நல்லது!


அவர்களை என்னிடம் அனுப்புங்கள்!


சரி தம்பிகளா! உங்கள் கண்மூடிகளை எடுத்து விடலாம்!
என் கூடவே வாருங்கள்! என் பெயர் மூன்!
ஆமாம்! நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் மிஸ்டர் மூன்?
''ஒற்றர்கள் ஒழிப்பு அலுவலகத்தின்'' ரகசிய தலைமை ஆபீஸில்!
தலைவர் உங்களுக்கு மற்ற விவரமெல்லாம் கூறுவார். நேராக செல்லுங்கள்!
வாருங்கள்...


நான்தான் மிஸ்டர் X.
அதென்ன? பெரிய கொம்பின் பெயரா?
மன்னிக்கவும் மிஸ்டர் X. மூசா சொல்வதை பொருட்படுத்த வேண்டாம். பயத்தில் ஏதேதோ உளறுகிறான்!
எங்களிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்?
அவசரப்படாதே! எல்லாவற்றுக்கும் பதில் கிடைக்கும்! முதலில் காரியத்துக்கு நீங்கள் தகுதி உள்ளவர்களா என்று சோதனை செய்து பார்க்க வேண்டும்!


எங்களை சோதனை செய்யப் போகிறாய்? எங்கள் திறமையை பற்றி உனக்கு தெரியுமா கிழவா? உன்னையே குளோஸ் செய்து விட்டு கம்பி நீட்டிவிடுவோம் நாங்கள்!


இவ்வளவு உற்சாகமாடப் நீங்கள் இருப்பதால் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய முதல் விஷயம்...


தரையில் கரண்ட் பாய்கிறது என்ற விஷயத்தை!


என்ன கனவான்களே?
அய்யோ! என் கால்கள் கிடுகிடுத்து விட்டன! காதெல்லாம் அடைத்து விட்டது!
சரி மிஸ்டர்! நீங்கள் பெரிய ஆள்தான்! விஷயத்துக்கு வாருங்கள்!


பிரமாதமாய் ஒன்றுமில்லே! உங்கள் இருவருக்கும் பல பரீட்சைகள் வைத்து உங்களை எடை போடுவோம்! உங்கள் ''திறமைகள்'' எப்படி என்று தெரிந்துக் கொள்ள!
விரைவில் ஆரம்பித்து விடுவோம்!



பெரும் ஆச்சரியம்! இருவரும் மிக மாறுப்பட்டவராய் தெரிகிறுர்கள்! இரு துருவங்கள்-தனி மண்டலங்கள்!
அதைத் தொடர்ந்து சோதனைகள் நடத்தப்பட்டன...
மிஸ்டர்; இதோ ஹெர்குலஸ் மூசா மீது ரிப்போர்ட்!
ஹ்ம்ம்ம்...


ஹெர்குலஸ் ரொம்ப சாதாரண கேஸ்: எந்த கனவுகளும், லட்சியங்களும் அவனிடம் இல்லை. அவனுக்கு அடிதடி தான் எல்லாம்!
மூசா?
அப்பாடா! மூசாவா! அவன் அதிசயப் பிறவி. அவன் உடம்பெல்லாம் மூளை! ஆனால் அந்த மூளையில் ஒரே அடைச்சல். ஆனால் அவன் ஓர் மாமேதை என்பதில் துளியும் சந்தேகம் கிடையாது.
நம் திட்டத்துக்கு சரியான ஆட்கள் தான்!
வெரிகுட்! எங்கே அவர்கள்?


உடற்பயிற்சி அறையில் மிஸ்டர் ஜானுடன் இருக்கிறார்கள்!
அங்கு என்ன நடக்கிறது என்று பார்ப்போம்!
தம்பிகளா! இதெல்லாம்! பார்க்க சற்று விந்தையாக இருக்கும்!
என் சொந்த பாணியில் நான் இங்கு மல்யுத்தம், தற்காப்பு பயிற்சிகள் சொல்லி தருகிறேன். இது கராதே, ஜுடோ, போலும் இருக்கும். ராணுவ பயிற்சி போலும் தோன்றும்!
எனக்கு பசிக்குது!


சரி! நீதான் பெரியவன் நீ ஆரம்பித்துவிடு!
வேண்டாம்! மூசா வே ஆரம்பிக்கட்டும்.
ஹெர்குலஸ் பின் வாங்குகிறான்! பயமா?
இல்லை! நீதான் முதலில் ஆரம்பிக்க வேண்டும்!
நீங்கள் அவசியம் என்று நினைத்தால் சரி!
சரி! எனக்கு ஒரு கும்மாங் குத்து கொடு பார்ப்போம்! முழு பலத்தையும் பயன் படுத்த வேண்டும்!
வேண்டாம் விஷப் பரீட்சை! வீணாய் உடம்பு புண்ணாகி விடும்!


அட உன்னை ஒன்றும் செய்ய மாட்டேனப்பா! முதல் நான் அல்லவா!
திறமையை காண்பிக்காமல் நிற்கிறீர்களே! இன்று முழுவதும் நிற்க வேண்டியது தான்!
சரி செய்து காட்டுவோம்!
ஓ...கே!
கும்!


உடம்பு எப்படி உள்ளது?
ஒன்றுமில்லே! ஜோராய் தான் இருக்கிறேன்! லேசாய் கம்பளத்தில் சாய்ந்து விட்டேன். அவ்வளவு தான்!
ஏய்! எனக்குப் பசிக்கிற் பசியில் கம்பளத்தை கடித்துத் தின்னப் போகிறேன்!


சரி! இன்றைக்கு பயிற்சி போதும்! என்ன?
மிக்க நன்றி! நாங்கள் போய் வருகிறோம்!
போங்கள்! வர வேண்டாம்!


விந்தையிலும் விந்தை ஜானின் திறமையை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன்! ஐந்து, ஆறு பலசாலிகளை கூட அவன் சமாளித்து விடுவான்! இந்த அதிரடி ஹெர்குலஸ்!
இவனுக்கு அதிரடி என்ற பட்டப்பெயர் எப்படி வந்தது?
அவன் ஓர் மாஜி கால்பந்தாட்ட வீரன்! அதில் அவனுக்கென்று ஒரு "அதிரடிப்" பாணி வகுத்துக் கொண்டானாம். அதனால்தான் இந்த பட்ட பெயர்!
ஏன் விளையாட்டை விட்டு விட்டான்?


லஞ்சம் வாங்கிக்கொண்டு, வேண்டுமென்றே தன் அணியை தோற்கச் செய்ததாக அவன் மீது ஒரு குற்றச்சாட்டு! அதில் அவன் மாட்டிக் கொண்டு ஜெயிலுக்குப் போய்விட்டான்! ஆனால்தான் நிரபராதி என்று கடைசிவரை கூறி வந்தான்!
சரி, மூசாவும் அவனும் இப்பொழுது எங்கே?
ஜேக்கப்புடன், ரூம் நெம்பர் 24லில் "விஷேத யுக்திகள்" பற்றிய பயிற்சியில் இருக்கிறார்கள்!
உதாரணத்துக்கு இந்த கட்டில் பார்வைக்கு எப்படித் தோன்றுகிறது?
தம்பிகளா! இது ஓர் அதிசய உலகம். சாதாரணமாய் தோன்றும் எல்லாவற்றிலும் விஷமம் இருக்கும்!
மிகவும் வசீகரமாய் உள்ளது- என்னால் நிற்கவே முடியவில்லை! படுக்கவேண்டும் போல் இருக்கிறது!


ஆம்! கவர்ச்சியாகத்தான் இருக்கிறது! இதில் மீளா தூக்கம் தூங்கிவிடக் கூடாதல்லவா? இதோ பாருங்கள்! மிக ஜாக்கிரதையாக இந்த தலையணையை எடுத்து—
தரையில் போட்டு, மிதிக்கிறேன்!
ஏய்! செருப்பு காலால் இந்த வேலையா? இதன் மேல் நான் தூங்கவா?
க்ளிங்
க்ளிங்
க்ளிங்


சாவதைவிட, அழுக்கு தலையணைமேல் தூங்குவது ஒன்றும் தப்பில்லை! இந்த தலையணைக்குள் என்ன உள்ளது என்று பார்த்தீர்கள்ா? சிறு கண்ணாடி துண்டுகள் பார்த்தீர்களா?
கொடியதொரு வாயுவை, தேக்கி வைத்திருந்த ஒரு பாட்டிலின் துண்டுகள் அவை! உங்கள் தலை அதில் பதிந்திருந்தால் அந்த சையனைட் வாயு இன்னேரம் உங்களை எம லோகத்திற்கு பார்சல் செய் திருக்கும்!
இன்னும் ஓர் விஷயம்! கையுறை- அணிவதும் அபாயமானது. எதிரி ஏதேனும் விஷ ஊசியை அதில் சொருகியிருக்கலாம் அல்லவா?
ஆண்டவா! கட்டிலைப் பார்த்தால் தூக்கம் வரவில்லை! பீதியைக் கிளப்பப்போகிறீர்கள்!


உங்களை தீர்த்துக் கட்டவேண்டும் என்று எதிரி நினைத்தால் அதற்கு பல வழிகள் உள்ளன. விஷ ஊசியை உங்கள் துணிகளில் சொருகலாம்! பற்பசையில் கலக்கலாம்...
அட... மறந்தே போனேன்!
இன்று சிறைச்சாலையில் "திரைப் பட இரவு" என்று அபிமான நடிகனின் படம் இன்று போடப் போகிறார்கள். வேகமாய் போனால் ஜெயிலுக்கு நொடியில் போய்விடலாம்!
ஏய் இரு மூசா!


தெரிந்தோ, தெரியாமலோ, நாம் இருவரும் இங்கு ஓர் வேலையாக சேர்ந்து வந்தோம். அதை முடித்து கொடுத்து விட்டு, நாம் தனித் தனி பாதையில் செல்லலாம்! நான் சொல்வது புரிகிறதா?
சரி! வாத்யாரே-புரிந்து-நன்றாகவே புரிந்து கொண்டேன்!


உங்களால் ஹெர்குலஸை நம்ப முடிகிறதா?



நம்புலாம் என்று தோன்றுகிறது! ஆனால் இந்த இரட்டையரின் உறவு மிக விசித்திரமாக, உள்ள
மூசாலால் ஹெர்குலஸுக்கு தொல்லைதான் என்றாலும் அவனை ஹெர்குலஸ் ஏன் சகித்துக் கொள்கிறான்?
நல்ல கேள்வி! மனோதத்துவ ரீதியில் பதில் சொல்கிறேன்! சில பலசாலிகளுக்கு தங்கள் அகாத்திய பலத்தைக் கண்டு ஓர் வித குற்றமனப் பாண்மை உண்டாகும்
அதே போல் சில குட்டையான மனிதர்கள் தங்கள் தாழ்வு மனப் பான்மையை ஓர் வித அசட்டு முரட்டுத்தனத்தால் ஈடுகட்டி விடுவார்கள்!
சில நெட்டையான மனிதர்கள் தங்கள் உயரத்தை குறைக்க கூன்போட்டு கொள்வார்கள்!



எல்லாவற்றின் பின்னாலிருக்கும் தத்துவம் ஒன்றே! ஹெர்குலஸிடம் பலம் உள்ளது! மூசாவிடம் சாதுர்யம் உள்ளது! இருவரும் இணைந்து செயல்படும் பொழுது பிரகாசிக்க வாய்ப்புண்டு!
உங்கள் உதவிக்கு மிக்க நன்றி! நமக்கு இவர்கள் போதும்!
வாருங்கள்! மிஸ்டர் X உங்களை பார்க்க விரும்புகிறார்!
இதுதான் நேரமா? ஏனய்யா?
அவன் கண்ணை கண்டாலே! எனக்கு பயமாக இருக்குதே!


அது வேறொன்றும் இல்லை. ஓர் வித காண்டாக்ட் லென்ஸ். அவருக்கு கண்ணில் ஓர் கொடிய வியாதி-வெளிச்சமும் தூசும் ஓர் வித அலெர்ஜியை ஏற்படுத்தும்!
அவனை கண்டாலே ஏதோ பைத்தியம் போல் தெரியுது!
யார் யாரைப்பற்றி என்ன சொல்வது என்று விவஸ்தையில்லாமல் போய் விட்டது!
மிஸ்டர் மூசா! உங்கள் திறமைகள் மிக குறைவு என்று எங்கள் சோதனைகள் கூறுகிறன. எலக்ட்ரோனிக்ஸில் கொஞ்சம் திறமை தெரிகிறது! மற்றபடி மனித தன்மை மிக சொற்பமாகத் தெரிகிறது!
இதைக் கண்டு பிடிக்க உங்களுக்கு இத்தனை நேரம் செலவானதா?
என்ன சொன்னீர்கள்? திறமை குறைவு, சொற்பமா? ஒரு கும்மாங்குத்து விட்டால் எப்படி இருக்கும் தெரியுமா?


அலட்டிக் கொள்ளாதே மூசா!
உன்னுடைய எலக்ட்ரோனிக் திறமைதான் எங்களுக்குத் தேவை. "மைண்ட்-ஸ்கேனர்" அதாவது மனதில் நினைப்பதை அப்படியே படமாகக் காட்டும் கருவியைப் பற்றி என்ன நினைக்கிறாய்?
இது முடிகிற காரியமா? மூசா?
மனித மூளையே ஓர் விதத்தில் அப்படித்தானே இயங்குகிறது. மனிதனின் உள்ளுணர்வுகளை,, எண்ணங்களை, நரம்புகள் மூலம், கம்ப்யூட்டர் வழியாக ஓர் டிவி செட்டில் ஏத்தமுடியுமானால்-அது சாத்தியம் தான்!


ஆனால் எண்ணஓட்டத்தில் தொடர்பு இருக்காதே! இங்கும் அங்குமாய் மனம் அலையும் போது படங்கள் சிதறித் தோன்றுமே! டிவியில் காண சரிப்படாது!
நாம் அன்றாடம் காணும் டிவியை விட ஒன்றும் மோசமாய் இருக்காது!
போலீஸ் விசாரணைக்கு அத்தகைய கருவி ரொம்ப பயனுள்ளதாக இருக்கும்!
நிச்சயமாக! ஒருவனின் மூளையில் தோன்றக்கூடிய எண்ணங்களை கருவி அப்படியே பிரதிபலிக்கும்! மேலும் அவன் கேள்விகளுக்கு நிஜமான பதில் கிடைக்கும் என்பது உத்திரவாதம்!


அப்படி ஓர் கருவி இருந்தால்.
இருக்கிறதே- அப்படிப்பட்ட கருவி ஒன்று இருக்கிறதே!
அது அவ்வளவு எளிதல்ல மிஸ்டர் மூசா! அந்த கருவியின் பெயர் ''மென்டெல்'' (Men-Tel) கண்டுபிடித்வன் கையில் தான். அது இன்னும் உள்ளது.
அந்தக் கருவியை நான் உடனடியாக பார்க்க வேண்டும்!
அது மட்டும் என் கையில் கிடைத்தால்.
இதுவும் அவ்வளவு எளிதல்ல! நமக்குப் போட்டியாக மற்றுமொரு நிறுவனம் இதே ''மென்-டெல்லை'' தேடி அலைகிறது!
இதற்கிடையில் வேறு ஓர் இடத்தில்...
ரகசிய உளவாளிகள் மூலம் மென்டெல்லை தேடுகிறான்- மிஸ்டர் X!
அதை தடுத்து நிறுத்த நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்!


வேறு ரகசிய ஏஜண்டுகளும் இந்தக் கருவியை தேடுகிறார்களா?
ஆம்! ஆக்டோ என்னும் ரஷ்ய பெண்தான் அந்தக் குழுவின் தலைவி!
தற்சமயம் சொந்த வருமானத்திற்கு அவள் வேலை பார்க்கிறாள். ஆனால் ஆரம்பத்தில் ரஷ்ய உளவு ஸ்தாபனத்தில்தான் அவள் பணிபுரிந்தாள்!
அவளை எப்படிக் கண்டுப் பிடிப்பது?
கண்டுபிடிப்பது முடியாத காரியம்! எதற்கும், எல்லாவற்றிலும் உஷாராக இருங்கள்!
என்னை கூப்பிட்டீர்களா பாஸ்?


ஆம்! இவர்தான் கேஷியர். கடைசி அறிவுரைகளை உங்களுக்குக் கூறுவார்.
இந்தக் கவரில் பணமும், ஒப்பந்த விதிமுறைகளும் உள்ளன. ''மென்-டெல்'' கருவியை கொண்டு வந்தீர்களானால் ஒரு லட்சம் டாலர் வரை கிடைக்கும் உங்களுக்கு!
மென்-டெல்லை கண்டுபிடித்தவனுடன் பேரம் பேசவேண்டுமென்றால் இந்த போன் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள்! உடனடியாக பணம் வந்து சேரும். மென்-டெல்லை அவன் விற்க மறுத்தால் திருடிக் கொண்டு வந்துவிடுங்கள்
என்ன. திருடிக் கொண்டா?
சரி சரி! நேரம் ஆகி விட்டது! மீண்டும் கண்ணை மூச்சிதான்!



சற்று நேரம் கழித்து ஹெலிகாப்டரில் கிளம்பினர்—
6.7
59
ACE
SERVICE STATION
உங்கள் கண்மூடிகளை எடுத்து விடலாம். நாம் மீண்டும் பாலைவனத்துக்கு வந்து விட்டோம்!
சீல் வைத்த கவரை திறந்தால், நாம் அடுத்து செய்ய வேண்டியதை தெரிந்து கொள்ளலாம்!
வீராதி வீரன் நீயே திறந்து பார்த்துச் சொல்!


படிப்பதற்கு சுலபமாய் தெரிகிறது எல்போ-பெண்ட் என்னும் சிற்-றூருக்கு நாம் முதலில் செல்ல வேண்டும்!
தெரியாமல் என்ன? ஆனால் பாரீஸ் நகரம் போல் அது சொர்க்க பூமி என்று நினைத்து விடாதீர்கள்!
பைலட் சார்! அது எங்கே இருக்கிறது என்று உங்களுக்கு தெரியுமா?
ஒரே ஒரு மட்டரக விடுதி தான் இருக்குமாம் அங்கே! புதிய நபர் ஒருவர் நம்மை சந்தித்து விபரம் சொல்வாராம்!
அருமையிலும் அருமை! சிற்றூர்! ஒரே விடுதி! அதுவும் மட்டத்திலும் படுமட்டம்! இடம் வரும் போது மறவாமல் என்னை எழுப்பினால் போதும்!


பலமணி நேரம் கழித்து—
இது என்ன சத்தம் பைலட்?
தெரியவில்லையே! ஏதோ என்ஜின் கோளாறு!
தக்! தக்!


உடனடியாக நாம் இறங்க வேண்டும்! இந்தப் பண்ணை அருகில் தரையிறங்கலாம!
என்ன? திடீர் கோளாரு? ஏன்?
வாயை மூடு! அவனை தொல்லை செய்யாதே!


அய்யோ! பிளேனின் இறக்கைப் பகுதி பூமியை இடித்து விட்டதே!
நல்லவேளை! நாம் அனைவரும் குளோஸ் என்று நினைத்தேன்!
அப்பாடா! நமக்கு உதவி புரிய யாரோ ஓடோடி வருகிறார்கள்!


உதவி புரியவா! நம்மை தொலைத்துக் கட்டவா பார்க்கிருன்!
டும்... டுமில்...


நிறுத்துங்கள்! நாங்கள் சரணடைந்து விட்டோம்!
நாங்கள் உங்கள் நண்பர்கள் தான்! பார்த்தால் தெரியவில்லை?
விதைத்துவிட்ட நிலத்தை பாழாக்கிவிட்டு நண்பர்கள் என்று வேறு சொல்கிறீர்களா? ராஸ்கல்!


வேறு வழி தெரிய வில்லே! என்ஜினில் பழுது!
நஷ்டஈடு தந்துவிடுகிருேம்! ஏதேனும் எங்களுக்கு வண்டி ஏற்பாடு செய்ய முடிந்தால் அதற்கும் பணம் தருகிருேம்!
நஷ்டஈடு கண்டிப்பாய் தரவேண்டும்! வண்டியும் இல்லே, வாடகையும் வேண்டாம்!
ஆனல் அதோ தெரிகிறதே அந்த புத்தம் புதிய லாரியை உங்களுக்கு விற்கிறேன்.
இந்தத் தகரடப்பாவா? புதுசா? நீங்கள் பிறந்த வருடத்தில் புதியதாக இருந்திருக்கும்!
அதெல்லாம் ஓர் பொன்னுன காலம் தம்பி! நாங்கள் இருவரும் ஸ்வரம் பாய்ந்த கட்டைகள்! வண்டி வேண்டுமா? வேண்டாமா? ஒரே வார்த்தையில் தான் பதில்!
வேண்டும்!


பைலட்! எங்களோடு வருகிறீர்களா?
எப்படி முடியும்? விமானத்தை ரிப்பேர் செய்ய வேண்டும்!
அப்போ நாங்கள் புறப்படுகிறோம்!
இதென்ன? உட்கார்ந்தவுடன் உடம்பெல்லாம் குலுக்கி விடுகிறது? இதில் பயணம் செய்ய முடியுமா?
முடியும்! சற்று புதுமையாக இருக்கும் பயணம்!
அதே சமயம் —
ஹலோ? இருவரும் பண்ணையை விட்டு கிளம்பி விட்டார்கள்! லாரியில் ஓர் மினி டேப் ரெக்கார்டர் பொருத்தியுள்ளேன்!


வெரிகுட்! பைலட்டுக்கு "பரிசை" கொடு!
சரி! அவர்களை கொண்டு வந்து சேர்க்கும் வேலை-யைத் தான் முடித்து விட்டேனே! காசைத் தரலாமல்லவா?
உங்களுக்கு முழு "சன்மானம்" தர சொல்லி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்து விட்டது!
டுமில்.. டும்
இந்த முறையில் தான் நாங்கள் முழு சன்மானம் அளிப்பது வழக்கம்!



அதே நேரத்தில்—
டேப் ரெக்கார்டர் நன்கு இயங்குகிறதா?
வெரி குட்! இதற்கு மேல் நெருங்க வேண்டாம்! இந்த ஆள் நடமாட்டமில்லாத ஊரில் எதையும் விரைவில் கண்டுவிடலாம்!
அப்படியே செய்கிறேன் மேடம்!
1-543W
சரியாக உள்ளது மேடம்! ஐந்து மைல் தூரத்தில் நம் முன்னே செல்கிறது லாரி!
அதே நேரத்தில் லாரியின் முன்—
அட லிஃப்ட் கேட்கும் ஒரு பெண்! அவளுக்கு இடம் தரலாமா ஹெர்குலஸ்?
நம்மை விட்டால் அவளுக்கு வேறு கதி? வழிபூராவும் ஒரு காரைக்கூட நாம் பார்க்கவில்லையே!
மிக்க நன்றி நண்பர்களே! இங்கேயே சமாதியாகி விடுவேன் என்று நினைத்தேன்!
இவ்வளவு ஒதுக்குப்புறத்தில் என்ன செய்கிறாய்?


உள்ளே தள்ளி இருக்கும் ஓர் கிராமத்தில் ஒருவனோடு சேர்ந்து வாழ்ந்துக் கொண்டிருந்தேன். திடீரென்று அவன் என்னை துன்புறுத்த ஆரம்பித்து விட்டான்!
என் பெயர் டிக்கி; அதை சொல்ல மறந்துவிட்டேனே!
என் பெயர் ஹெர்குலஸ் — அவன் பெயர் மூசா!
தினம் அடி உதை தான்! கேட்டால் அடிக்கின்ற கைதான் அணைக்கும் என்பான்! எனக்குத் தான் அவன் சொல்லும் தத்துவம் புரியவில்லையோ என்னவோ?
யாருக்கு தான் இந்த வாழ்க்கைத் தத்துவம் புரிகிறது? ஹூம்!


அவனைத் தள்ளு, எருமைப் பயல்! என்னை நன்கு பார்! பெண்கள் எப்பொழுதுமே என்னை மொய்த்து விடுவார்கள்!
உன்னைச் சுற்றி ஈக்கூட்டம் தான் மொய்க்கும்!
முட்டாள் பெண்ணே! என்னோடு பழகிப்பார்! என்னைப் பற்றி புரிந்து கொள்வாய்!
சரியான அறுவையாய் இருப்பாய் போல் தெரிகிறதே!
ஏதோ அறிவிப்புப் பலகை தெரிகிறது!
என்ன எழுதி—யுள்ளது?
எல்போ பென்ட், ஒரு மைல்!


இதோ விடுதி!
இந்தக் கட்டை வண்டியில் இல்லை. இந்தத் துருபிடித்த டப்பாவில் வந்தபிறகு அசையாத அனைத்தும் எனக்கு மிகவும் பிடித்து விட்டது!
ELBOW BEND
HOTEL
கண்றாவி!
லாரி நின்றதுபோல் தெரிகிறது மேடம்!
ஆம்! சிற்றூர் உள்ளது அருகே! இரவு தங்குவதற்கு நின்றிருக்கலாம்!


நம் அறைகளை பற்றி ஹெர்குலஸ் கவனிக்கட்டும். நாமிருவரும் சேர்ந்து ஏதாவது சாப்பிடலாமா?
தொலைந்துபோங்கள்! நான் தூங்க வேண்டும், நிம்மதியாக!
இதோ உங்கள் அறை சாவி!
நன்றி! நாளை காலை சந்திப்போம்!
எனக்கு மனசு சரியில்லை! டிக்கியின் உள்-ளத்தில் எனக்கு இடமில்லையே!
இப்பொழுதுதானே அறிமுகம் ஆனது! அதற்குள் எப்படி அன்யோனியமாக் பழக முடியும்?


நாம் சந்திக்க வேண்டிய பெரிய மனிதன் எங்கே?
தெரியவில்லை! நம் பெயர்களை கீழே ஆபீசில் தரும்போது யாரும் அடையாளம் காண பித்துக்கொள்ளவில்லை!
உறக்கம் வா! வா! என்கிறது! ஐம்பது வருடம் கழித்து என்னை எழுப்புங்கள்!
கைகளை மேலே தூக்குங்கள்!


யார் நீ? இங்கு நீ என்ன செய்கிறாய்? இரண்டே வினாடியில் எனக்கு பதில் வேண்டும்!


பொறுங்கள்! கண்ணில்-லாமலும் கண்ணா தெரியுமே. அவர் - அனுப்பினார்!


யார்? மிஸ்டர் X? நீதான் நாங்கள் சந்திக்கவேண்டிய பெரிய மனிதனா?
அப்படியே வைத்துக்கொள்! "மென்டெல்லோ" கண்டுபிடித்தவனின் பெயர் டாக்டர் அலெக் ஜில்லி. கோர்டை ஏரி என்ற ஏரியின் மையத்தில் உள்ள ஒரு தீவின் நடுவே, ஜில்லிக்கு வீடு உண்டு!
நாளை காலை உங்களுக்கு ஓர் கார் தரப்படும். அந்த பெட்டியில் வழிகாட்டும் ஒரு வரைபடம் உள்ளது! மீதத்தை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டியது!
சரி! நன்றி!
மூசா? கையில் என்ன வைத்திருக்கிறாய்?
இதுவா? அந்த பெரிய மனிதனின் துப்பாக்கி! நம்மிடம் எந்தத் துப்பாக்கியும் இல்லையே!


ஏய்! இந்த துப்பாக்கிக் கதையெல்லாம் நமக்கு பிடிக்காது!
ஆமாம் ஆமாம்.. நீ சொல்வது சரிதான்! துப்பாக்கி-யெல்லாம் நமக்கெதற்கு?
மறுநாள் காலை-
இதோ உங்கள் ரூம்பில் மிஸ்டர் ஹெர்குலஸ்!
அது சரி! எங்களோடு வந்த பெண் எங்கே?
அவளா? ஒன்றும் கூறாமல் காலை-யிலேயே போய் விட்டாள்?
என்ன நன்றி-யுணர்ச்சி! அட்டா!
ஊர், பெயர் தெரியாமல் பண்மில்லாமல் எங்கு போய் விட்டாள்?
போனால் போகட்டும் போடா! இவள் இல்லாமல் உலகம் இருண்டு விடுமா-என்ன?
புத்திசாலி. தான்-போ!


என்னைப் பிடிக்காதவர்களை எனக்கும் பிடிக்காது! அவ்வளவு தான்!
உன் மீது யாருக்குத்தான் பிரியம் வரப்போகிறது?
மேடம்: அவர்கள் புறப்படு- கிறார்கள்!
HOTEL
ICE
OPEN
சரி! அவர்களை பின் தொடரு ஜோ!


சிலமணி நேரங்கள் கழித்து கோடை ஏரியில்-
இங்கு இருக்கும் ஒரே தீவு இதுதான்! நீங்கள் தேடும் தீவு இதுவாகதான் இருக்க முடியும்!
சரி எங்களுக்கு வாடகைக்கு ஓர் மோட்டார் படகு தேவை!


அந்த பாறை மீது ஓர் தோணி தெரிகிறது! வீட்டில்தான் இருப்பான் பயல்!
எப்படியாவது 'மென் - டெல்லே' விற்க அவன் சம்மதிக்க வேண்டும்! ஏனோ தெரியவில்லை அதை அவனிடமிருந்து அபகரிக்க எனக்குப் பிடிக்கவில்லை!
ஏன் இந்த திடீர் மனமாற்றம் வாத்யாரே?
யாரும் காணவில்லையே!
இப்படி வா மூசா! இந்தக் கதவு திறந்து இருக்கிறது!
அப்படியே நில்! அசையாதே!


அதே சமயம் —
மேடம்! ஓர் போட்டில் தீவுக்கு சென்றிருக்கிறார்கள்! அவர்களை நான் பின்தொடர வேண்டுமா?
தேவையில்லை! மென்டெல்லை எடுத்துக்கொண்டு அவர்கள் இந்தப்பக்கமாய் தானே வர வேண்டும்! இங்கேயே காத்திருப்போம்!
இதற்கிடையில் தீவில்—
ஏய்! சின்னப் பெண்ணே! அந்தத் துப்பாக்கியை அப்பால் போடு!
நாங்கள் திருடர்கள் அல்ல! வியாபார விஷயமாக டாக்டர் ஜில்லியை காண வேண்டும்!
அப்படியா? என் பெயர் விவியன்- டாக்டர். ஜில்லியுடைய மகள் நான்!



மிக்க மகிழ்ச்சி! நான் தான்...
ஷ்... பேசாமல் கிட! உங்கள் தந்தை வீட்டில் இருக்கிறாரா?
இல்லை! எனக்கு அதை நினைத்தால் தான் ஒரே கவலையாக உள்ளது!
நான் இன்று வெளியூர் புறப்படுகிறேன் என்பது அவருக்கு தெரியும்! என்னை பார்க்காமல் அவர் ஒரு நாளும் இருக்கமாட்டார். ஆனால் இன்னும் அவரைக் காணோமே!
என்ன செய்வது? குழப்பமாய் இருக்கிறது!
நீங்கள் இங்கேயே இருப்பதால் உங்களுக்கு உங்கள் தந்தையின் கண்டு பிடிப்புப் பற்றி தெரிந்திருக்க வேண்டுமே!


மூளையில் ஏற்படும் எண்ணங்களை பிரதிபலித்து படம் எடுத்துக் காட்டக் கூடிய சக்தி வாய்ந்த அபார கருவி!
அதன் பெயர்- ''மென்-டெல்''
என்ன? மென்-டெல்லா?
கெட் அவுட்! வெளியே செல்லுங்கள்!


என் தந்தை அப்படி ஓர் கருவியை கண்டு பிடித்தது மாபெரும் குற்றம். ஆரம்பத்திலிருந்தே அதனால் எங்களுக்கு தொல்லை மேல் தொல்லைதான்!
பதட்டம் வேண்டும் அம்மணி! கருவியைக் கண்ணால் கூடப் பார்க்கக் கூடாதா?


என் புத்தியை செருப்பால் அடிக்க வேண்டும். உங்களை வீட்டுக்குள் நுழைய விட்டதற்கு!
உண்மையிலேயே நாங்கள் வியாபாரம் பேசதான் வந் துள்ளோம். அதுவும் அரசாங்கத்தின் சார்பாக! எங்களை நம்புங்கள்!


உங்கள் முகரையைப் பார்த்தால் அரசாங்க அதிகாரி-களைப் போல் தெரியவில்லை!
“மென் – டெல்” என்ற கருவி நிஜமாகவே இருந்தால், அதற்கு ஓர் கோடி டாலர்வரை விலை பேச எங்களுக்கு அனுமதி உண்டு!
“மென்-டெல்” நிஜம் தான்! அதன் படங்கள் ரகசிய குறிப்புகள் எல்லாம் இந்த இரும்பு பெட்டகத்தில் உள்ளது. ஆனால் இதன் எண் இயக்கம் எனக்கு தெரியாது!
பூ! இவ்வளவு தானா? என் கட்டைவிரலாலேயே இதைத் திறந்து விடுவேன்!
அப்படியொன்றும் இது எளிதான தல்ல! பெட்டகத்தை உடைத்துத் தான் குறிப்புகளை கைப்பற்ற முடியும்.


இதை உடைக்கவா? நீங்கள் நிஜமாகவே அரசாங்க அதிகாரிகளா? போலிசுக்கு போன் பண்ணினால் விஷயம் தெரிந்து விடும்!
உங்கள் நிலை எனக்குப் புரிகிறது. ஆனால் எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை!


உங்கள் பொறுப்புணர்ச்சியைக் கண்டு பெருமையடைகிறேன். ஆனால் இப்போதைக்கு நீங்கள் போன் பேச முடியாது


உங்கள் மேலதிகாரிகளிடம்
உங்களைப்பற்றி புகார்
பண்ணாமல் விடமாட்டேன்!
அதிகாரிகள்
எங்களைவிட
மோசமான
வர்கள்!
ஹெர்குலஸ்,
எனக்கு ஓர்
டார்ச்
வேண்டும்!


இதோ ஒன்று
அடுப்படியில்
கிடைத்தது!
அதில் இருக்கும் பாட்டரிகளை எடு!
அப்புறம் மரக் கைபிடி உள்ள ஒரு
கத்தியும், ஒரு இரும்பு கம்பியும்
எனக்கு தேவை!


என்ன செய்யப் போகிறாய்?
அதைப் பற்றி உனக்கென்ன? இந்த கத்தி முனை பாட்டரியை தொட்டவுடன், வேடிக்கையைப் பார்!
இவைதான் அந்த குறிப்புகளா?
வாவ்! அதிசயமாகத் தெரிகிறதே!


இது என்னப்பா மூசா.. தாய விளையாட்டுப் போலத் தெரிகிறதே!
டாக்டர் ஜில்லி எவ்வளவு கச்சித மாக "மென்-டெல்லை" செய்திருக் கிறார் என்றால் அதை—
ஓர் சூட்கேசில் அடக்கி விடலாம்!


''மென்-டெல்லே'' இது போன்ற பெட்டியில் வைக்கமுடியுமா மூசா?
ஓ யெஸ்! தாராளமாகக் கொள்ளுமே! எனக்கும் ரகசியக் குறிப்புகளை விட்டு போக மனமில்லைதான்...
ஆனால் இரும்பு பெட்டியை திறக்கத் தெரியாமல் நான் முழித்துக் கொண் டிருந்தேன்! எனக்காக மிகவும் சிரமப் பட்டு திறந்து விட்டீர்கள்! தயவு செய்து எல்லா குறிப்புகளையும் என்னிடமே தந்து விடுங்கள்!
அதிரடி வாத்யாரே?


பலே! சபாஷ்!




இவ்வளவு அவசரமா? எங்களைப் பார்த்தால் இளிச்சவா .. ஆஆ!


அய்யோ ...


என்ன மூசா...
எப்படி இருக்கிறது
உடம்பு?
கால் இடறி விட்டது!
அடுத்த முறை ஒரு கை
பார்த்துவிடுவேன்!
துப்பாக்கியை
போட்டுவிட்டு,
ஓடிவிட்டாள்!


அதோ மோட்டார் படகில் தப்பிக்கப் பார்க்கிறாள்!


அடிப்பாவி! நம் படகை அவிழ்த்துவிட்டு விட்டாளே!
இவளை சும்மா விடக்கூடாது!


ஏய்! அந்த போட்டை இங்கு வந்து சேர்க்காவிட்டால் உன காதுகளை அறுத்து விடுவேன்!
சுடாதே! வேண்டாம்!


மூசா! வேண்டாம்! விளையாடாதே!


டாடா! போய் வருகிறேன்!
இந்த சைத்தானின் துப்பாக்கி காலியாக இருந்திருக்கிறது!
க்ளிக்! க்ளிக்!


நல்லகாலம் என்று நினைத்துக் கொள்! இந்தத் துப்பாக்கி, விவகாரமே வேண்டாம்! புரிகிறதா?
சரி விடு! இனி முதல் நான் அகிம்சைவாதி! உனக்குத் திருப்தி தானே!


மென் டெல்லை ஒரேடியாகத் தொலைத்து விட்டோம்!
பரவாயில்லை! நம்மிடம் அதன் குறிப்புகள் இருக்கிறதே! மிஸ்டர் X க்கு அது போதுமானது!


எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை!
எனக்கொரு சந்தேகம்! அவள் உண்-மையில் டாக்டர் ஜில்லியின மகளா?


அவள் யார்? ரஷ்யத் தலைவி ஆக்டோவாக இருக்குமோ?
இருக்கலாம்! இந்தத் தீவி-லிருந்து தப்பிக்க வேண்டும்!


வேறு ஏதாவது உதவி நாட முடியாமல் போனை துண்டித்து விட்டாயிற்று!
சும்மா புலம்பாதே! இன்னொரு போன் உள்ளதா என்று பார்ப்போம்!


ஃபோன் இல்லாவிட்டால் தொலைந்தோம்!


ஆ...!
அய்யோ! இதென்ன
புது விவகாரம்?


டாக்டர் ஜில்லியாகதான்
இருக்க வேண்டும்!
இறந்து விட்டாரா?
ஆமாம்! ஒரே குண்டு!
ஆள் காலி!


''மென்-டெல்லே'' விட்டுக் கொடுக்காது அவர் கடைசி மூச்சு வரை போராடியிருப்பார்!
நாம் போலீஸிடம் சென்று, விபரம் கொடுக்க வேண்டும்.
கேட்க நன்ருகதான் உள்ளது! ஆனல் ஒரு சிக்கல்! முதல் பாயின்ட் இந்த கொலைக்கும், நமக்கும் சம்பந்தமில்லை என்பதை போலீஸ் நம்பாது!
இரண்டாவது பாயிண்ட்: நாம் இந்த பாழும் தீவிலிருந்து எப்படி வெளியேற முடியும்? அந்த கொடுமைக்காரி நம் போட்டை அவிழ்த்துவிட்டு தொலைத்து விட்டாளே!
இங்கிருந்து நீந்துவதை தவிர வேறு வழியில்லை!


உன் அபார யோசனைக்கு எனது பாராட்டுகள்! வேறு ஏதாவது வழி சொல்! எனக்கு நீச்சல் தெரியாது!
அப்படியா? உனக்கா? என்ன செய்யலாம்?


கற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை அப்பனே!
சத்!


ஏய்? என்னை கொல்லப் பார்க்கிருயா?
இந்த நிமிடம் வரை அப்படி ஒரு எண்ணம் எனக்கு இல்லை! ஆனல் இன்னும் ஒரு வார்த்தை பேசினையோ-


அய்யய்யோ! முக்கிய மான்னதை மறந்தே விட்டோமே!
நான் இன்னும் உயிரோடு தான் இருக்கிறேனு?


மென் டெல்லைப் பற்றிய ரகசிய குறிப்புகளை பாதுகாக்காமல் தண்ணீரில் குதித்து விட்டோமே!
அய்யோ!
எந்த நிலையில் இருக்கின்றன?
அடியோடு போச்சு!
மேடம்! இருவரும் தீவிலிருந்து வந்து விட்டார்கள்.
என்ன செய்யலாம் அடுத்தபடியாக மேடம்?


மென் டெல்லின் குறிப்புகளை கைப் பற்றிய வுடன் அவர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்!
நம்மிடம் மென் டெல் கருவியே இருக்கும் போது, நமக்கெதற்கு குறிப்புகள்?


இந்த அற்புத கருவியின் கட்டுப் பாட்டு விதிகளை நாம் உணர ஒருவருட காலம் ஆகும். கையில் குறிப்புகள் இருந்தால் உடனே விற்று பணமாக்கலாம்!
சரி! உன் விருப்பப் படியே நடக்கட்டும்!


சே! மென் டெல்லின் குறிப்பும் இல்லை! மென் டெல்லை கண்ணால் பார்க்கவும் வில்லை! எப்படி மிஸ்டர் X ன் முகத்தில் விழிப்பது?
சரிவிடு! போனது போகட்டும், நான் இப்படியே கம்பி நீட்டி விடுகிறேன். மீண்டும் ஜெயிலுக்கு விஜயம் செய்ய எண்ணமில்லை!


நான் வெளியே வந்தது வந்தது தான்! முடிந்தால் அவர்கள் என்னை கைது செய்யட்டும்!
நானிருக்கும் வரை அவ்வளவு சிரமம் இருக்காது, தம்பி!


உன்னை எங்கும் செல்ல விடமாட்டேன்! என் அருகில்தான் உன் இடம்!
உனக்கென்ன பைத்தியமா? சுதந்திரத்தை மதிக்காமல் ஏதோ உளறுகிறாயே!
எது சுதந்திரம்? நம் தண்டனைக் காலம் முடிந்த பிறகுதான் உண்மையான சுதந்திரம்! அப்புறம் நீ யாரோ? நான் யாரோ?
சரி வா! நீ சொல்வதிலும் நியாயம் உண்டு! இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?
NO PARKING
நாம் மீண்டும் எல்போ பெண்டுக்கே செல்வோம்! ஏதாவது துப்பு கிடைக்கும்!
மிஸ்டர் X ஐ எப்படி சந்திப்பது என்றே புரியவில்லை?


மேடம்! அவர்கள் புறப்படு கிறார்கள்! குறிப்புகளை பறித்து விடவா?
NEXT BOAT OCEAN BEACH
ஆமாம்!


இங்கே வேண்டாம்! அதிக ஜன சந்தடியாக உள்ளது! அவர்களை தொடர்ந்து செல்!
உங்களுக்காக பண்ணையில் காத்திருக்கிறேன்.


மூசாவும், ஹெர்குலஸும் திரும்பிச் செல்கையில்—
நான் பேசுவது காதில் விழவில்லையா?
பைத்தியங்களிடம் பேசி எனக்கு பழக்கமில்லை!
எவ்வளவு நேரமாக இந்தக் கார் நம்மைப் பின் தொடருகிறது?
யாருக்குத் தெரியும்? என் எதிர்காலத்தை எண்ணி நான் நொந்து போயிருக்கிறேன்!
அவன் எப்படியாவது போகட்டும்! எனக்கு எந்த அவசரமும் இல்லை!
நம்மை முந்தி விடவேண்டும் என்று அல்ப ஆசைபோலும்!


ஆ! இதென்ன பயங்கர இடி?
டமால்!
ஐயோ! ஐயோ! பூகம்பமா?


இந்த பூதத்தோடு போராட முடியாது போ!
ஜாக்கிரதை மூசா! மீண்டும் நம்மை தாக்குகிறான்!


அய்யோ! நாம் சரிந்து விழுந்து கொண்டிருக்கிறோம்!


டேய் தடியா! உனக்கு எத்தனை திமிர்? குடித்துவிட்டு நிதானம் இல்லாமல் இருக்கிறாயா? அல்லது கண்ணில்லாத குருடனா நீ!
பேசாமல் மேலே வாருங்கள் இரண்டு பேரும்!


எங்களை வேண்டுமென்றே தாக்கினையல்லவா?
வாயை மூடிக் கொண்டு காரில் ஏறுங்கள்!
கும்!
உன் முகரையை உடைத்தால்தான் எனக்கு நிம்மதி!


கும்!
அம்மாடி! குத்துக்கல் போல் நிற்கிறானே!


உனக்கு என் ஸ்பெஷல் “அதிரடி”தான் தேவை! இந்தா வாங்கிக் கொள்!


மொர்ப!


நிறுத்து! போதும் உன் வேடிக்கை!


எப்படி இருக்கிறாய், ஜோ?


ம்ம்ம்ப்...


கும்!
சபாஷ்! ஜோ! பழிக்குப் பழி! தூக்கி அவனை காரில் போடு! மற்றவர் கள் நமக்காகக் காத் திருப்பார்கள்!
மேடம், உங்களை ஒரு கேள்வி நான் கேட்கலாமா?
நீங்கள்தான் ஆக்டோவா?
ஹலோ? பண்ணையா? நான் தான் மேடம் ஜோஞு பேசு கிறேன்! மாலையில் நாங்கள் பண்ணைக்கு வருவோம்!
103


நினைத்தது கிடைத்தது என்று அவளிடம் சொல்லிவிடு!
சரிமேடம்!


சும்மா முனகாதே! வந்து சேர்ந்தாச்சு!


இதோ வந்து விட்டார்கள்! கூடே வருவது யார்? ஹெர்குலஸூம், மூசாவுமா?
இவர்களை எதற்கு இங்கு தேவையில்லாமல் அழைத்து வந்தீர்கள்? நமக்கு வேண்டியது கிடைத்த பின்னர் இவர்கள் எதற்கு?
ஷ்ஷ்ஷ்! உனக்கு அனுபவம் போதாது!
இவர்களின் திறமையை நாம் வேறு விதத்தில் உபயோகிக்கலாம்!
இவர்கள் திறமையைப் பற்றி எனக்கு கவலை யில்லை! எனக்கு தேவை மென்டெல்லின் குறிப்புகள்!
கண்டிப்பாக வேண்டுமோ?


மூசா! ரொம்பவும் வேண்டிக் கேட்கிறார்களல்லவா? அந்தபொக்கிஷத்தை பத்திரமாகக் கொடு!
ஜாக்கிரதையாகப் பிடிமா?
இதுவா நான் பார்த்த குறிப்புகள்? என்ன நாசம் செய்தீர்கள்?


இந்த கதிக்கு காரணம் நீங்கள்தான்! எங்கள் போட்டை நடு கடலில் அவிழ்த்து விட்டு, எங்களை கட்டாய நீச்சல் அடிக்க வைத்தது யார்? தண்ணீரால் தான் இப்படி போய்விட்டது!
எதற்கும் லாயக்கற்ற ஜடங்கள்!
இவர்கள்தான் மிஸ்டர் X அனுப்பிய ஆட்கள்!


உங்களுக்கு மிஸ்டர் X ன் இருப்பிடம் தெரிந்திருக்க வேண்டுமே !
எங்களுக்கா? தெரியாதே!
உங்களுக்கு தெரியாமல் இருக்காது!


நீங்கள் புரியாமல் பேசுகிறீர்கள்! அவர் எங்கே இருக்கிறார் என்று எங்களுக்கு தெரியாது!
எங்களை கண்ணை கட்டி விட்டு அழைத்து வந்தார்கள்!
பேத்தாதீர்கள்!


என்ன கொடுமை! வாழ்க்கையில் முதல் முதலாய் உண்மை பேசுகிறேன்! ஆனால் யாரும் நம்பத்தயாராக இல்லையே!
விதி, மூசா! விதி!
வாயை மூடுங்கள்!
இவர்களை என்ன செய்யப்போகிறீர்கள்? ஜோவிடம் ஒப்படைக்கப் போகிறீர்களா?
இல்லை! எனக்கு ஒரு ஐடியா - மென்டெல்லை வைத்து, இவர்களை பரிசோதனையிட்டால் என்ன?
நீ என்ன நினைக்கிறாய்?
ஓ-கே!



அவர்களிடம் பல்வேறு கேள்விகளை கேட்டுவிட்டு, பதிலை..மென்டெல்லின் வெண்திரையில் காண்போம்
மூசாவுக்கு முதல் சோதனை!
மூசாவின் எண்ண ஓட்டம் பெண்கள் மத்தியில் வைத்துப் பார்க்கக்கூடிய அளவிற்கு நாகரீகமாய் இருக்காது!
வாயை மூடிக் கொண்டு அமைதியாக இரு!
கருவியை தலையில் பொருத்தி விட்டேன்!
சரி! சுவிட்சை போடு!


ஏதாவது தெரிகிறதா?
நாசமாய்ப் போகும் இந்தக் கண்ரு விகளைப் பார்த்து மிஸ்டர் X ன் இருப்பிடத்தை எப்படிக் கண்டுக் கொள்வது?
சே! சகிக்க வில்லை!


அதை நிறுத்திவிடு!
ஓ . தோன்றுமே! அதாவது பொய், பித்த லாட்டம், திருட்டுபற்றிய நினைப்புகள்!
பெண்களைத் தவிர இவனுக்கு வேறு நினைப்பே தோன்றாதா?


வேண்டாம்! மென் டெல் நல்ல முறையில் இயங்குகிறது என்று தெரிகிறது. ஆனால் நமக்கு தேவையானதை பிரதிபலிக்கச் செய்ய வேண்டும்!
என்ன செய்யலாம் மேடம்? ஹெர்குலஸுக்குப் பொறுத்தி பார்ப்போமா?


இவர்களை ஜோவிடம் ஒப்படைத்து விடுவோம்!
ஜோவின் முரட்டுத் தனத்தை இவர்கள் மீது காண்பித்தால் தான் மிஸ்டர்Xக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க முடியும்!
ஜோ, சற்று உணர்ச்சி வசப்பட்டு விடக்கூடும்!
பரவாயில்லை உங்கள் நியர்யம்! எங்களை அடித்து, X க்கு பாடம் கற்பிக்க வேண்டுமா?
ஒரே அடியில் கொன்று விட்டால் பிரச்சனை தீர்ந்தது! நாமும் இடத்தை காலி செய்து விடலாம்!
எதற்காக பதட்டமடைகிறாய்? பட்சிகளை இதோ பாட்டுப்பாட வைக்கிறேன் பார்! இந்த கதவை திற!
வேறு ஏதாவது நல்லதாக நினைத்துப் பார்க்கலாமே!



டிக்கியா!
ஆஹா! அவளுக்காக நீ உருகுவாய் என்று எனக்கு தெரியும். உங்கள் இருவரையும் நான் முன்பே கண்காணித்து வருகிறேனே!
என் டிக்கியை பிடித்து வைத்திருக்கிறீர்கள்? இவளுக்கும் இந்த கதைக்கும் சம்பந்தமே இல்லை!
உன் பிரிய டிக்கியை ஜோ "கவனித்த" பிறகு, X ன் இருப்பிடத்தை நீ சொல்லத்தான் போகிறாய்!
"கவனிக்க" என்றால் என்ன அர்த்தம்?


பிரமாதமாய் ஒன்றும் இல்லை! ஜோவுக்கு ரொம்பவும் "இளகிய" மனசு! இல்லையா ஜோ?


தயவு செய்து பொறுங்கள்! என் கூட்டாளியிடம் பேசுகி-றேன்!
அய்யோ! வேண்-டாம்!
'சட்'டென்று பேசு! அதிக நேரமில்லை!


ஏய் மூசா!. உடனே ஏதாவது செய்ய வேண்டும்!
என்ன செய்யமுடியும்? நமக்கு தான் உண்மையில் மிஸ்டர் X ன் இருப்பிடம் தெரியாதே!


தெரிந்தாற் போல் நடிக்க வேண்டியதுதான்! உன் பயங்கர மூளையை கொஞ்சம் உபயோகப்படுத்தேன்!
ஹையா! அந்த இரும்புப் பெட்டகத்தை திறக்க உபயோகித்த பாட்டரி என் பையில் தானே உள்ளது?


ஆமாம்! டார்ச் பாட்டரி வைத்து என்ன செய்யப் போகிறாய்?
பார், மகனே! பார்!


நான் அந்த அடுப்பு அருகே செல்கிறேன் நீ இவர்களிடம் பேச்சு கொடு!
எந்த வகையில் இந்த பாட்டரிகள் நமக்கு உதவப் போகின்றன?
நீங்கள் பேசியது போதும் கேட்ட கேள்விக்கு பதில் தேவை! ஜோ நீ சூடைப்போடு!


சற்று பொறு ஜோ!
அய்யோ! வேண்டாம்!
மேடம் சற்று பொறுங்கள்! நீங்கள் விரும்பியதை கூறிவிடு-கிறேன்!


அப்படி வா வழிக்கு! மிஸ்டர் X ன் இருப்பிடம் எங்கே?
மேடம்! ஒரு பேப்பரும், பென்சிலும் தேவை!



எதுவும் தேவையில்லை! வாய் மொழியாய் சொல் போதும்!
சரி! நேரே சென்று, மேற்கில் திரும்பி, தென் கிழக்கு ப்க்கம்!
என்க்கு திசைக்ள் பற்றி கவலையில்லை! குறிப்பான இடம் வேண்டும்!
டமால்—டுமீல்—
டமால்!


மூசா! நான் டிக்கியை
அழைத்துக் கொள்கி
றேன்! நீ ஜென் டெல்லை
கவனி!
எனக்கு கண்ணே
தெரியவில்லையே!
அய்யோ!
என்ன நடந்தது?


இதோ! மென்டெல் என் கையில் உள்ளது! தப்பிக்க வழியை பார்ப்போம்!
இந்தப் புகையில் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை!
பயம் வேண்டாம்! டிக்கி! உன்னை சேரோடு தூக்க வேண்டியது தான்!
அடப்பாவி! கார் சாவி வேண்டுமே! எப்படி தப்பிக்கிறது இந்த நரகத்திலிருந்து?
யாருக்குத் தேவை சாவி? நீ கண் மூடித் திறக்கும் முன், நான் காரை கிளப்பிவிடுவேன்!
ஏறிக் கொள்ளுங்கள்!
டிக்கியை இப்படியே உள்ளே நுழைக்க முடியாதே! எப்படியாவது கட்டுகளை அவிழ்க்க வேண்டும்!
ஜாக்கிரதை! அந்த டிரைவர் தடியன் வருகிறான்!


இதோ வந்துவிட்டேன் மூசா! இவன் முகத்திலேயே நாற்காலியை எறிந்துவிட்டு வருகிறேன்!


ஜாக்கிரதை! குனிந்து கொள்ளுங்கள்! துப்பாக்கியால் தாக்குகிறார்கள்!
டுமீல்! டுமீல்!


துப்பாக்கி சத்தம் கேட்கிறதே தவிர, நமக்கு ஒன்றும் சேதமில்லை! டிக்கி? எப்படி இருக்கிறாய்?
நானா? சந்தோஷமாய் இருக்கிறேன்!
இந்த வண்டியை தவிர, வேறு எந்த காரும் என் கண்ணில் படவில்லை? தொல்லை விட்டது!


அப்படி நினைக்காதீர்கள் நண்பர்களே!


நீ அந்தக் கட்சியை சேர்ந்தவளா?
ஆமாம்! மேடம் ஜோனா நன்றாகவே திட்டமிட்டிருந்தார்! அழகான பெண்ணைக் கண்டால் உங்களைப் போன்ற மன்மதன்கள் உதவி செய்யாமல் இருப்பார்களா? வசமாய் எங்கள் வலையில் மாட்டிக் கொண்டீர்கள்!


நீயும் ஒரு பெண் பிறவியா?
அதைப்பற்றி உனக்கென்ன கவலை?
உண்மையில் உன் பெயர்தான் என்ன? ஆக்டோவா? மேட்மா? ஒரே குழப்பம்!


பெயர்களெல்லாம் ஒரு சால்ஜாப்பு தான்! எனக்குத் தெரிந்தவரை ஆக்டோ என்பது சங்கேத வார்த்தை!
உங்கள் கூட்டத்தில் பெண்கள் மட்டும் தானா?
ஆமாம்! வண்டியை பண்ணைக்குத் திருப் புங்கள்!
சே! இதென்ன ஊரா? பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறதே!
வேகமாய் வண்டியை திருப்பு!


வேகமாகத் தானே
திருப்பி வேண்டும்!




அவள் துப்பாக்கியை முதலில் பறித்து விடு!
இதோ எடுத்து விட்டேன்!


இவளை என்ன செய்யலாம்?
அந்தக் கவலையை என்னிடம் விடு! நீ சற்று காலாற நடந்து விட்டு வா! நான் இவளை கவனித்துக் கொள்கிறேன்!



அதைவிட ஒரு நல்ல யோசனை! இவளை இங்கேயே நடுரோட்டில் இறக்கி விட்டுப் போய்விடலாம்!
பாவிகளா? இந்த பாழும் இடத்தில் என்னை தனியாக இறக்கி விடாதீர்கள்!
உனக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்! நீ வயதில் சிறியவள்! தனிமையில் அமர்ந்து உன்னைப் பற்றி சிந்துத்துப் பார்!
சரி! பேச்சு போதும்! இறக்கிவிடு இவளை!
நீ கிழவியாகும் வரை இங்கேயே கிடக்க வேண்டியதுதான்!


சரி! நம் முதல் பணி வெற்றிகரமாக முடிந்தது! 'மென்-டெல்' நம் கையில்!
இதுவே முதலும், கடைசியுமான பணி! அதோ பார் அவளை! பரிதாபமாக சிறு புள்ளியாக தெரிகிறாள்!


இப்படி தவிக்கவிடுவதை விட சுட்டே தள்ளியிருக்கலாம்! சனிப் பயல்கள்!


அதே நேரத்தில் எல்டோ பெண்டில், ஹோட்டல் அறையில்—
என்னை யாரும் தேடி வந்தார்களா? ஏதும் செய்தி உண்டா?
ஒன்றுமில்லை சார்!
நான் என் அறையில் இருப்பேன். யாரும் கூப்பிட்டால் எனக்குத் தெரிவியுங்கள்!
ஓ. கே!
ஹெர்குலஸும், மூசாவும் இரண்டு நாட்கள் முன்னரே வந்திருக்க வேண்டும், திட்டப்படி!


மாபெரும் தலைவர் மிஸ்டர் X கூட தப்புக்கணக்கு போடலாம் என்று எனக்கு புரிகிறது! ஊஹூப்...


ஹெர்குலஸா? அடக் கடவுளே! எப்படி நீ என் அலமாரியில் அவதரித்தாயப்பா?
அந்தப் பாடமெல்லாம் உங்களிடம்தான் கற்றுக் கொண்டேன் குருவே!



உங்களோடு இருந்தானே ஓர் திருட்டு முழி ராஸ்கல் அவன் எங்கே?
இதோ இங்குதான் இருக்கிறான்! மென்-டெல் அவன் கையில்தான் உள்ளது!




மென் டெல்லா? உண்மையில் உங்களிடம் உள்ளதா!
எங்களிடம் இருக்கிறது! விரைவில் நாங்கள் மிஸ்டர் X ஐபார்த்து இந்தப் பயங்கரக்கருவியை கொடுத்துவிட்டு, நிம்மதியாய் தூங்கவேண்டும்! இதற்கு நீங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டும்!


விரைவில்—
இருவரும் வருகிறார்-போல் தெரிகிறதே!
உடனே நான் அவர்களை சந்திக்க வேண்டும்!


நாம் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது. உங்கள் கண்-மூடிகளை எடுத்து விடாதீர்கள்!
தெரியும் தெரியும்! பழைய கதைதானே!
REGULAR
59
ACE
SERVICE STATION


வாருங்கள்! வாருங்கள்! உங்கள் திறமைக்கு எனது பாராட்டுக்கள்!
இந்த வேலை எங்களுக்கு சரிப்பட்டாது! முதலில் உங்கள் கருவியை பெற்றுக் கொண்டு எங்களுக்கு விடை கொடுங்கள்!
நாம் வேலை ஒப்பந்தம் பேசும்போது கொலை பற்றி நீங்கள் எதுவும் குறிப்பிடவில்லையே!


கொலையா? யாராவது கொல்லப் பட்டார்களா?
நிச்சயமாக! டாக்டர் ஜில்லி இந்தத் துப்பாக்கியால் கொல்லப் பட்டார்!


அப்படியா? இந்தத் துப்பாக்கியாலா?
என்ன சொல்கிறீர்கள்?


டாக்டர் ஜில்லியின் அகால மரணம் வருந்தக்கூடிய விஷயம்தான்! ஆனால் அதில் நமக்கு ஒருகோடி டாலர் மிச்சம்.


இந்த துப்பாக்கியும், உங்கள் இருவரின் கைரேகையும் என்னிடம் பத்திரமாக இருக்கட்டும்!



எதற்காக நீங்கள் இந்தத் துப்பாக்கியை வைத்துக் கொள்ள வேண்டும்?
எதற்கு இவ்வளவு பதட்டம்? என்னிடம் பத்திரமாக இருக்கட்டுமே!
என்னிடம் நீங்கள் வேலை பார்க்கும்வரை உங்களை டாக்டர் ஜில்லியின் கொலைக் குற்றத்திற்காக போலீசிடம் காட்டிக் கொடுக்கமாட்டேன்!
கொலை செய்தவன் மூசா! அவனுக்கு உதவி புரிந்தவன் ஹெர்குலஸ்!
மிஸ்டர் X எங்களிடம் விளையாடாதீர்கள்! உடனே அந்தத் துப்பாக்கியை—


என்னைப் பற்றி நீங்கள் இன்னும் முழுமையாகப் புரிந்துக் கொள்ள வில்லையே!
அய்யோ! மின்சார அதிர்ச்சி!
இதற்கிடையில்—
ஆக்டோ வேலையாக—யிருந்தால் ஒருமணி நேரம் கழித்து வருகிறேன்!
வேண்டாம் மேடம்! உங்களை அவர்கள் காத்திருக்க சொன்னார்கள்!


இதோ சில நிமிடங்களில்...
ம்... இப்பொழுதாவது என் முகத்தில் விழிப்பதற்கு உனக்கு தைரியம் வந்ததா?
ஆம்... தலைவியே!
உன்னுடைய படுதோல்விக்கு காரணம்?
நம் எதிரிகளை நாம் சாமான்யர்களாக எடைபோட்டு விட்டோம்! கத்துக் குட்டிகள் என்று நினைக்க-என் தவறுதான்!


மிஸ்டர் X போல் ஓர் அதிசய மனிதர் முட்டாள்களை நம்மிடம் எப்படி அனுப்புவார் என்று சிந்துத்து பார்க்கவில்லையா?
தவ-று-என்னுடை யது தான் தலைவியே!
ஆனால் அந்த இருவரும் படு கில்லாடிகள், வல்லவர்-களுக்கு வல்லவர்கள்!
அடுத்த முறை நானே அவர்களை. கவனித்துக் கொள்கிறேன்!


இதற்கிடையில்—
என் திட்டத்தைக் கூறிவிட்டேன். என்னோடு வேலை பாருங்கள்! என் திட்டங்களை அமுல் படுத்துங்கள்! உங்களுக்கு அதுதான் நல்லது!
ஆமாம்! எங்களை விலை கொடுத்து வாங்கிவிட்டதாக நினைத்து விட்டீர்கள்! இல்லையா?
பதட்டப் படாதீர்கள்! நியூயார்க்கில் வசதிமிக்க விடுதியில் தங்கிக் கொள்ளுங்கள். அனைத்துச் செலவுகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்!
நாம் விடை பெறும் நேரம் வந்துவிட்டது!
இந்த ஹெலிகாப்டர் உங்களை அழைத்துச் செல்லும்!
கண்களை மூடிக் கொள்ளுங்கள்!






லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும்,
ஆசிரியரும்: S. விஜயன், முகவரி:
லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி-626123.
போன்: 1159. வெளியீடு எண்: 26. அச்சிட்டோர்:
முத்து பைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி-626123.

# வாசகர் கடிதம்!

S, பாலதண்டாயுதம், கணபதி, கோவை-6

"கோடை மலரில் வந்த அனைத்துக் கதைகளும் படு ஜாலி! இது போல் தொடர்ந்து வெளியிடுங்கள்!

* J. சிவசங்கர், வ.ஏ.பி., ஆரணி

ஸ்பைடர், ஆர்ச்சி கதைகளைத் தான் கோடை மலரில் முதலில் படித்தோம. ஜாலி! 5 ரூபாய் விலையில் இத்தனை கதைகளும், ஒரு சூப்பர் தாய விளையாட்டையும் வழங்கிய உங்களுக்கு நன்றி! நன்றி!

* இரா. குருகுமரன், பாண்டிச்சேரி-3.

"சக்தி மேன்" கதையையும், படங்களையும் பார்த்து பிரமித்துப் போனேன்! "கோடைமலர்" எனக்கு சாகசம் புரியும் உற்சாகத்தின் ஒரு அழைப்பு!

* V. R. ராஜகோபால், வில்லிவாக்கம்.

இதுவரை எந்த காமிக்ஸிலும் வெளியிடப்படாத வகையில் சூப்பர் ஹீரோக்களின் விதவிதமான சித்திரக் கதைகளை வெளியிட்டு இமாலய சாதனை படைத்திருக்கும் ஒரே காமிக்ஸ் - 'லயன் காமிக்ஸ்' தான்! வாழ்க! வளர்க!

* வை. சரவணகுமார், கும்பகோணம்-1.

"கோடைமலர்" எங்களுக்கு 'சில'வென்று இருந்தது!

* N. நசீர் உதீன், சேலம்-8.

"கோடை மலர்" எங்கள் உள்ளத்தை மலரச் செய்து விட்டது! இதே சூப்பர் டோராக்கள் மீண்டும் சாகஸம் புரிந்து எங்களை மகிழ்விப்பார்கள் என நம்புகிறேன்!

* P. விஜேந்குமார், அள்ளக்குறிச்சி-2.

கோடை மலரின் முத்தான எட்டு கதைகளும் எங்களுக்கு சத்தான விருந்து!

* க. பாபுயோகேஸ்வரன்,
நல்லப்பநாயக்கன்பட்டி.

கோடை ஸ்பெஷல் கண்டவுடன்
நெஞ்சமெல்லாம் மகிழுது!
எடுக் கதை படித்தவுடன்
எண்ணமெல்லாம் பறக்குது!
எனக்குப் பிடித்த ஸ்பைடர் கதை
கலக்கலாய் இனிக்குது!
இரும்பு மனிதன் ஆர்ச்சி கதை
நறுந்தேனாய் சுவைக்குது!.
மற்ற அனைத்து நாயகர்கள் செய்து
விட்ட சாகஸம்
எங்கள் உடம்பெல்லாம் மெய்சிலிர்த்து
புல்லரிக்க வைக்குது!
புத்தகத்தில் மாணிக்கமாய்
விளங்குகிற சிங்கமே!
வளர்க உந்தன் கதை வளம்
வாழ்க நமது புவி வளம்!

* K. சேரன், மேட்டூர் டேம்

கோடை மலர் சூப்பர்!
படங்கள் அருமை! அட்டைப்படம் ஜோர்!
ஆனால் ஈகிள்மேன் கதையில் ஒரு சிறிய
தவறு உள்ளது: அது என்னவென்றால்
"விசித்திரக் கடத்தல்" கதையில்
கடைசியில் ஈகிள்மேன் வால் ஏஜன்ஸியில்
கிரிக்கெட் விளையாட்டை ரசிப்பதாக
உள்ளது! அமெரிக்காவில் கிரிக்கெட்
விளையாட்டு கிடையாது!

(நண்பரே, அது கிரிக்கெட் விளையாட்டு
அல்ல — "பேஸ்பால்" ஆட்டம்!
பேஸ்-பாலிலும் ஸிக்ஸர் அடிக்கலாம்.
அது மட்டுமல்ல, அமெரிக்காவிலும்
கிரிக்கெட் ஆடுகிறார்கள்! சில வருடங்-
களுக்கு முன்னால் நம் இந்திய கிரிக்கெட்
அணியின் சில உறுப்பினர்கள் அங்கு
Exhibition match-க்காகச்
சென்றனர் — ஆசிரியர்.)

# பரட்டைத் தலை ராஜா!




பரட்டையா? ராஜ வம்சத்தைச் சார்ந்த என்னை பரட்டை என்று அழைக்கிறார்கள்... சே!
ஹ்ம்ம்... அவர்கள் பேரிலும் தப்பு இல்லைதான்! என் தலையைப் பார்... சே!


பரட்டைக் கண்ணு..
இதை இப்படியே விட்டு
விடக்கூடாது! ஹேர்-
ஸ்டைலை உடனே
மாற்றித் தீரவேண்டும்!
நகரம்
ஊரையே இல்லை.. இல்லை
காட்டையே ஒரு கலக்கு கலக்க
வேண்டும் என் புதிய
ஹேர் ஸ்டைல்!


HAIRDRESSERS
ஆ! இதோ இருக்கிறது
சலூன்! கூட்டம் இல்
லாமல் இருந்தால்
தேவலை!
HAIRDRESSER'S
ஆ ஆ வ்!
சிங்கம்!
எங்கு போனாலும்
எனக்கு ராஜமரி-
யாதை தான்!


மாறு
வேடப்
போட்டி
இன்று
ஹா! ஹா! அருமையான உடுப்பு சார் இது! அசல் சிங்கம் போலவே தோன்றுகிறது! பிடறி ரோமத்திற்கு ஷாம்பூ போட்டு விடுகிறேன்!
க்ர்ர்ர்...


விரைவில்...
இதோ முடிந்து விட்டது! சும்மா சொல்லக் கூடாது! அமர்க்களமாய் உள்ளது இந்த ஸ்டைல்!


பத்து ரூபாய் கொடுங்கள் சார்!


ஹேய்...திருட்டுப் பன்றிப் பயலே...காசை கொடுக்காமலா ஓடுகிருய்?
விர்ர்ர்...
இதென்ன வம்பு? சிங்கத்திடம் காசு இருக்குமா-என்ன?


என்ன அருமையான அலங்
காரம்! இந்த சிங்கத்தைப்
போலவே என் நாய்க்கும்...
பெருமை!
சி — சிங்கமா?
ஐயோ!
காப்பாற்றுங்கள்!
சிங்கம்!


எங்களைப் போன்ற ஆணழகர்கள் போகும் இடமெல்லாம் இது போல களேபரம் ஏற்படுவது சகஜம்!
காடு
இனி ஐயாவின் அட்டகாசத் தோற்றத்தை கண்குளிர பார்க்க வேண்டும்!


அடேய் மன்மதா! அசத்தி விட்டாய்... போ!
க்ர்ர்..
க்ர்ர்...


அதென்ன ரீங்காரம்?


ஐயையோ! வெட்டுக்
கிளிகள்! உயிரோ
டிருக்கும் எதையும்
தின்னும் இவை!
அம்மாடி...


இந்த பாறை பின்னால் பதுங்கிக் கொள்கிறேன்!


பசி தீர்ந்த பின்னர் வெட்டுக் கிளிகள் இடத்தைக் காலி செய்தன...
அ-அமைதியாய் இருக்கிறது! வெளியே வரலாம்!
ஸ்ஸ்ஸ்...!
ஸ்ஸ்ஸ்...!


நல்லவேளை சனியன்கள் ஒழிந்தன! கண்ணுக்குத் தெரியும் அத்தனையையும் கபளீகரம் செய்து விட்டனவே! ஹ்ம்ம் என் பிடறி முடி இன்னும் பாழாகமல் இருக்குமென நம்புவோமாக!


எ-என் பிடறி மயிர்! காணமல் போய் விட்டது! ஐயோ... திருடன்-போலீஸ்! வெட்டுக் கிளிகள் இதையும் தின்று விட்டன!


ஹேய்.. மொட்டைப் பயலே! முடிவெட்டப் போகவில்லையா?
விக் வைத்துக் கொள் கண்ணு!
சிரிப்பில் சுருண்டு விட்டேன் நான்!
வருத்தம்
இத்தனை நோஞ்சானா நீ?.
அண்ணே! என்னை தொப்பியாகப் பயன்படுத்தலாமே!
கழுத்தைப் பார் கழுத்தை!

முற்றும்.


மர்ம எதிரி!
லயன் காமிக்ஸ்
இரட்டை வேட்டையர் சாகஸம்!

அடுத்த வெளியீடு

லயன் காமிக்ஸ்

# ஆண்டு மலர்!



டெக்ஸ் வில்லர் துப்பறியும்

# பவளச் சிலை மர்மம்!

ரூ. 3/-



1986 ஜூலை 1-ந் தேதியன்று கிடைக்கும்!



# லயன் காமிக்ஸ்க்கு இரண்டாவது பிறந்தநாள்

114 பக்கங்கள்!
சூப்பர் சைஸ்!



பிரதிக்கு பதிவு செய்து கொள்ளுங்கள்!



வருகிறது!
அதிரடிப்
படை!
லயன்
காமிக்ஸ்

# சாகஸ வீரர் ரோஜர்

லயன் காமிக்ஸ்



ரோஜர் ஒரு
துடிதுடிப்பான இளைஞர்,
ஏனோ இவருக்கு விசித்திர-
மானதொரு ராசி!

இவர் செல்லுமிடமெல்-
லாம் இவரைத் தேடிவருவது
அபாயமும், தொல்லையும்
தான்!

வீண் சண்டைக்குப்போக
மாட்டேன்! ஆனால் வந்ததை
விடமாட்டேன்! என்னும்
மனப்பான்மை கொண்ட
ரோஜர், நேரடி மோதலுக்கு
இறங்கி விடுவார்!

துடிதுடிப்பான இவரது
சாகஸங்கள்
**லயன் காமிக்ஸ்**
வாசகர்களுக்கு ஒரு
விருந்தாக அமையப்
போகிறது!


அதிரடி வீரர்
ஹெர்குலஸ்!
ரூ.
2·50